விஜயபாரதம்
26.08.2020 மலர் - 1, இதழ் - 143 VIJAYABHARATHAM DAILY
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று)

## வணக்கம்

# இத்தாலிய அன்னைக்கு முள் கிரீடம்



ஒற்றை நாற்காலி. அதில் அமர்வதற்கு இருவர். ஒருவர் எழுந்ததும் மற்றவர் அமர்வார். போட்டி அமர்வதில் இல்லை, யாரை ஆதரிப்பது என்பதில் தான்.

சோனியா எழ, ராகுல் அமர, ராகுல் எழ, மீண்டும் சோனியா அமர, கடந்த ஆண்டே இந்த விளையாட்டுப் பலருக்கும் சலித்துப் போனது.

நான்கைந்து மாதங்களுக்கு முன்பு தலைநகரில் ஒரு தேநீர் விருந்து. காங்கிரஸின் முக்கியத் தலைவர்கள் பலர் அதில் கலந்து கொண்டனர். காங்கிரஸ் உருப்படுமா என்ற கவலை அவர்களுக்கு. கட்சியைக் கடைத்தேற்ற என்னென்ன செய்யலாம் என ஆலோசித்தனர்.

இத்தாலிய அன்னையின் பெருந்தன்மையை இந்த நாடு இன்னொரு முறை அறிந்துகொள்ள நல்ல வாய்ப்பு உருவானது. "நான் ராஜினாமா செய்கிறேன். நேரு குடும்பத்தவர் அல்லாத ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் பணியைத் தொடங்கிடுங்கள்" என்று வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அறிவிப்பை வெளியிட்டார் சோனியா.

சமீபத்தில் 23 பேர் துணிச்சலை வரவழைத்துக் கொண்டு "புதிய தலைமை மலர வேண்டும்" என வலியுறுத்திக் கடிதம் எழுதி அதைக் கட்சித் தலைவர் சோனியாவுக்கே அனுப்பி வைத்தனர்.

தற்போது நடந்துமுடிந்த காங்கிரஸ் காரியக் குழுவில் பலர் சோனியாவுக்கும், சிலர் ராஹுலுக்கும் துதி பாட, "இப்போதைக்கு இன்னொரு மன்மோகன் கிடைக்கும் வரை இவரே இருக்கட்டும்" எனக் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டது. சோனியா சோகத்துடன் முள் கிரீடத்தைத் தொடர்ந்து சுமக்கிறார். காங்கிரஸ் அந்த பார(வ)த்தைச் சுமக்கிறது.

*- கரிகாலன்*

# கோபி அமரரானார்

சங்க பிரச்சாரக் கோபிக்கு சொந்த ஊர் வேலூர். +2 முடித்த பிறகு முழுநேர வித்யார்த்தி 'விஸ்தாரகராக வந்தவர். கடலூர் அரசு கலைக்கல்லூரியில் படித்துக் கொண்டே சங்க வேலை செய்து கொண்டிருந்தார். படிப்பு முடிந்த பிறகு முழுநேர சங்க பிரச்சாரகராக வந்தார். பல பொறுப்புகளில் இருந்தார். கடந்த பல வருடங்களாக பாரதிய கிசான் சங்கம் (விவசாயிகள் அமைப்பு) தமிழக அமைப்பாளராக பணியாற்றி வந்தார்.



திங்கள் கிழமை (24-8-2020) உடல்நிலை சரியில்லை என்று சென்னை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எதிர்பாரத விதமாக மாரடைப்பால் காலமானார். அவருடைய இறுதிச் சடங்குகள் நேற்று வேலூரில் நடந்தன.

கோபியின் ஆன்மா நற்கதி அடைய நாம் அனைவரும் பிரார்த்திப்போம். அனுதாபம் தெரிவிக்க :

*அண்ணன் மகன் பாண்டியன் - 63793 14731*

# சிந்தனை செய் மனமே!



பயந்தவனுக்கு வலி நிறைந்த வாழ்க்கை
துணிந்தவனுக்கு வழி நிறைந்த வாழ்க்கை

## வேஷம் கலையும்



தி.மு.க துரைமுருகனின் மகன் கதிர் ஆனந்த் விநாயகர் சதுர்த்தி அன்று வீட்டில் பூஜை செய்து உள்ளார். அதனுடைய படம் தற்போது சமுக வலைத்தளத்தில் பரவி வருகிறது. வீட்டின் உள்ளே ஆத்திகனாக இருந்து விட்டு வெளியே நாத்திகனாக மாறி வணங்கிய கடவுளை விமர்சிப்பதையே வாடிக்கையாக தி.மு.கவினர் கொண்டு வருகின்றனர்.

## மதமாற்றம் செய்ய முயன்றவர் கைது



டெல்லியில் உள்ள கிறிஸ்தவ மிஷனரியின் சார்பாக மந்தீப் குமார் தன் மனைவி மார்க்கரெட் என்பவருடன் உத்தரபிரதேசத்தில் உள்ள எட்டா கிராமத்தில் தங்கி மதமாற்றம் செய்து வந்துள்ளார். அருகில் உள்ள சிவசிங்பூர் கிராமத்தில் வினோத் என்பவரை வலுக்கட்டாயமாக மதமாற்றம் செய்ய முயன்றுள்ளார். இதனை அறிந்த ஊரார் ஒன்று சேர்ந்து மந்தீப்பை பிடித்து காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். தவறை மந்தீப்பும் ஒப்புக் கொண்டார். தற்போது 295-ஏ சட்டப்படி அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## அமைச்சர் ராஜேந்திர பாலாஜி கவனத்திற்கு

ரம்ஜான் அன்று ஆவின் பால் பாக்கெட்டில் பிறையுடன் ரம்ஜான் வாழ்த்துக்கள் என்று அச்சிட்டு விநியோகிக்கப்பட்டது. ஆனால் விநாயகர் சதுர்த்திக்கு வாழ்த்துக்கள் சொல்லாதது ஏன்? இந்த தகவல் பால்வளத்துறை அமைச்சர் ராஜேந்திர பாலாஜிக்கு தெரியுமா?



# காலம் கற்றுக் கொடுத்த பாடம்

கொரோன காலம் நமக்கு பல படிப்பினைகளை வழங்கியுள்ளது. பலநூறுகோடிகளை குவித்து வைத்துக்கொண்டு லாப நட்ட கணக்குகளை கையாளும் சில பெரும் பணக்காரர்களிடம் இல்லாத பெருந்தன்மை அன்றாட வாழ்வுக்கே அல்லல் படும் சாமான்யர்களிடம் வெளிப்படுகின்றபோது அந்த பண்புக்கு மதிப்பு கூடுகிறது .

மதுரையில் யாசகம் பெற்றுவரும் பால்பாண்டி பத்தாயிரம் வீதம் ஒன்பது முறை மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்தது நாம் அறிந்ததே.

மேலும் தனது மகளின் ஐஏஎஸ் படிப்புக்காக சேர்த்து வைத்திருந்த ஐந்து லட்ச ரூபாயை மகளின் பிடிவாதம் காரணமாக வங்கியில் இருந்து எடுத்து தெருவில் பசியால் வாடிய பல நூறு பேருக்கு கொரோனா நிவாரண பொருட்களாக வழங்கிய மதுரை சலூன் கடை மோகன் .

எங்கிருந்தோ முகநூலில் வந்த வேண்டுகோளை ஏற்று தனது சொற்ப வருமானத்தில் இருந்து 18000 ரூபாயை தானமாக்கி சென்னையை சேர்ந்த ஆதரவற்ற பெண்மணிக்கு தையல் இயந்திரம் ஒன்றை வாங்கிக்கொடுத்த மதுரையை சேர்ந்த சைக்கிளில் டீ விற்கும் 25 வயது இளைஞன் தமிழரசன். இது நம் கண்ணில் தென்பட்டதும் காதில் கேட்டதும் மட்டுமே. வெளிச்சத்திற்கு வராமல் எவ்வளவு என்று தெரியவில்லை.

மேலே சொல்லப்பட்ட மூன்று பேருமே பெரும் வசதி படைத்தவர்களோ அல்லது அரசு ஊழியர்களோ அல்ல அத்தனை பேருமே தங்களது மனிதாபிமானத்தை கருணையை வெளிப்படுத்தியுள்ளனர். உதவி செய்ய பெரும் பணக்காரர்களாகவோ அல்லது வசதி படைத்தவர்களாகவோ இருக்க வேண்டும் என்பதல்ல, தேவையானது அடுத்தவர்களுக்கு உதவும் மனம் மட்டுமே. என்பதை இந்த சாமாண்யார் மூவரும் நிரூபித்துள்ளனர்

